2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் திருச்சியில் ...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இன்று அதை எடுக்க முடியாது. நீங்கள் காலையில்தான் அறிவிக்கை கொடுத்திருக்கிறீர்கள்.*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

காவிரி நீரைத் தமிழகத்திற்குத் தர கர்நாடக அரசு மறுப்பதுடன் மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்ட முயற்சிப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி காவிரியிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிட, கர்நாடக அரசு மறுப்பதுடன், காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில், புதிய அணை கட்ட முடிவு செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் ஆகியோர் சட்டப் பேரவை விதி 55–இன் கீழும், தி.மு.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் கோவி. செழியன், திரு. க. அன்பழகன், திரு. அ. சௌந்தரபாண்டியன் ஆகியோர் சட்டப் பேரவை விதி 56–இன் கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் சட்டப் பேரவை விதி 55–இன் கீழும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. எஸ்.பி. முத்துக்குமரன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 56–இன் கீழும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு ஆகியோரும் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.*